(முற்பகல் 9-30)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய அரசை மாநில அரசு நிதி உதவி கோரியிருக்கிறதா ? ஆம் எனில், அந்த நிதி உதவியைப் பெற்று, வாடகைக் கட்டிடங்களில் இல்லாமல், தமிழகம் அனைத்திலும் நீதி மன்றங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபார்டினேட் ஜுடிஷியரி சர்வீசைப் பொறுத்த வரையில் after the 42nd amendment of the Constitution அவைகள் கன்கரென்ட் லிஸ்டிலே சென்றுவிட்ட பிறகு. இது கன்கரென்ட்லிஸ்டிலே இருக்கின்ற காரணத்தினால், இந்த நீதிமன்றங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்கவில்லை. அதிகப்படியான நிதி ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மைய அரசுக்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது. அதன் அடிப்படையில் பார்த்தால், இந்தத் துறை கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாகப் புறக்கணிக்கப் பட்டு, இந்த நீதித் துறையை விரிவுபடுத்துவதற்கு சுமார் 20-லிருந்து 25 கோடி தேவையெனக் கருதப்படுகிறது. மைய அரசுக்கு இந்தப் பணத்தைத் தர வேண்டுமென்று மாநில அரசு கேட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை தமிழகத்திற்கு மட்டுமல்ல ; மற்ற மாநிலங்களுக்கும் இருக்கின்ற காரணத்தினால், தென் மாநிலங்களின் சட்ட அமைச்சர்கள் மாநாடு அடுத்த மாதம் நடக்க விருப்பதால், இந்த மாநாட்டின் மூலம் கூட மைய அரசை மாநில அரசுகள் வலியுறுத்த இருக்கின்றன.

பெரியார் மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண் 895.—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே இருந்து தனியாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம் இது. ஒவ்வொரு மாவட்டத்திலும், தலைநகரில் மத்திய சிறைச்சாலை இருக்கின்ற காரணத்தி னால், பிரிக்கப்பட்ட இந்த பெரியார் மாவட்டத் தலைநகரத்தில் மீண்டும் மறுபரிசீலனை செய்து மத்திய சிறைச்சாலை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

1981 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆதரைஸ்ட் அக்காமடேஷன் என்ற அடிப்படையில், பவானியில் 14-ம், தாராபுரத்தில் 26-ம், ஈரோட்டில் 35-ம், கோபியில் 24-ம், பெருந்துறையில் 8-ம், சத்தியமங்கலத்தில் 17-ம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. தற்போது ஈரோட்டில் இருக்கின்ற சப்-ஜெயிலை பொறுத்தவரைக்கும், அதை ஸ்பெஷல் சப்-ஜெயிலாக மாற்றி, ஆங்கு 35 பேர்கள் என்றிருப்பதை 200 பேர்களுக்கான அக்காமடேஷனாக உயர்த்தி, அதற்கு ஏற்ற அளவில் கட்டிடத்தை விஸ்தரிக்க, மற்ற வசதிகளையெல்லாம் செய்ய் அரசு திட்டமிட்டிருக்கிறது. அப்போது, மாண்புமிகு உறுப்பினர் என்னுகின்ற எண்ணம் ஈடேறும்.

வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

*** வினா எண் 896.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் குடகனாற்றில் கிணறுகள் அமைத்து பேரூராட்சியின் எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் வழங்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில அந்த நகரிலே ஆழப்படுத்தப்பட்ட துளைக் கிணறுகள் இரண்டே இரண்டு கிணறுகள் இருக்கின்றன. அவைகளில் உப்புத் தண்ணீராக இருப்பதால், முன்பு இதுபற்றி கேள்வி கேட்கப்பட்டபோது, நிதி உதவி பெற்று, இந்தப் பணி தொடங்கப்படும் என்று எழுத்து மூலமாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, வேடசந்தூர் பகுதிக்கு, குடகனாற்றில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, தண்ணீர் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கேள்வியில் வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கும் திட்டம் உண்டா என்பதுதான்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS